வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

விலை ரூ. 30/=

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 03.11.2025 திங்கட்கிழமை | இதழ் : 307 | பக்கங்கள் : 08

## ரூ. 40,000 கோடி பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றல்

கொழும்பு, நவ. 03

நடப்பாண்டின் இது வரையான காலப்பகுதி யில் சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று கடற்படை தெரிவித்துள்ளது.

அத்துடன், 54 ஆயிரத்து 870 கிலோ போதைப்பொருட்கள் கடற்படையின ரால்

07

### - மட்டு. எல்லைக்கிராமமான-

## நெடியகல்மலையை ஆக்கிரமித்து பிக்குகளால் விகாரை நிர்மாணம்!

### வெளிப்படுத்தினார் சிறீநேசன் எம். பி.



மட்டக்களப்பு, நவம்பர் 03

பொலநறுவையிலிருந்து வந்துள்ள பிக்குகள் மட்டக்களப்பு எல்லைக் கிராமமான நெடியகல்மலையை ஆக்கிரமித்து பௌத்த வழிபாட்டு தலம் ஒன்றை அமைக்கின்றனர். வடக்கில் குருந்தூர்மலையை போன்று கிழக்கில் இந்த விகாரை அமைக்கப்படுகிறது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவரின் இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

கிழக்கு மாகாண ஆளுநராக அநுராதா ஜஹம்பத் மக்களுக்கு சேவை செய்ததைவிட பிரச்னைகளையே அதிகம் உருவாக் கியிருந்தார். அந்த வரிசையில்தான் நெடியகல்மலையிலும் அவருடைய நிர்வாக காலத்தில் பௌத்த

07

## கத்தோலிக்க சமூகத்தையும் அரசாங்கம் ஏமாற்றிவிட்டது!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, நவ. 03

ஏப்ரல் மாதமாகும் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சுபச்செய்தியொன்றைச் சொல்வோம் என்று அரசாங்கம் ஏலவே தெரிவித்திருந்தது. ஆனால், இதுவரை அந்த சுபச்செய்தி வெளிவர வில்லை. தற்போதைய அரசாங்கம் கத்தோலிக்க சமூகத்தையும் ஏமாற்றி விட்டது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான தகவல்களை இந்த அரசாங்கமும் மறைப்பது பெரும் பிரச்னையாக உள்ளது - என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டு மக்கள் தற்போது ஏமாற்றமடைந்துள்ளனர். மாற்றத்தை எதிர்பார்த்து, புதிய முறைமைக்கு வாக்களித்த இலட்சக்கணக்கான மக்கள், மாகாண சபைகள் தேர்தல்மூலம் இதைவிடவும் சிறந்த மாற்றீடும் - வலுவான புதிய பாதையும் உதயமாகும் என்ற எதிர்பார்ப்பில் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

கட்சியின் அடையாளத்தைப் பாதுகாத்துக் கொண்டே நாட்டுக்காக

07

## பாதுகாப்பு கோருகிறார் ஞானசாரர்!

கொழும்பு, நவ. 03

"ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்னை கொல்லத் தயாராகி வருகின்றனர். இதனால், அமைச்சரவை பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் இருவரின் பாதுகாப்பு வேண்டும்" - இவ்வாறு கோரி கலகொடை அத்தே ஞானசார தேரர் பாதுகாப்பு செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தனது விகாரைக்கு வந்த புலனாய்வு அதிகாரிகள் இந்த அச்சுறுத்தல் குறித்து தமக்குத் தெரிவித்தனர் என்றும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

07

## ஈழத்தமிழரின் பாதுகாப்பு, நீதியை உறுதிப்படுத்த நடவடிக்கை தேவை

### ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் வலியுறுத்து

லண்டன், ஒக். 03

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தீர்மானம் ஊடாக தமிழ்ச் சமூகத்தின் பாதுகாப்பு, நீதியை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவளிக்கக்கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர் மைக்கேல் மெக்நமாரா வலியுறுத்தியுள்ளார்.

அவர் தனது எக்ஸ் தளத்திலேயே மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மனித உரிமைகள் பேரவையின்

07

## பாதுகாப்பு தேவையானோர் எழுத்துமூலம் கோரவேண்டும்

### பொலிஸ் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 03

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு தேவைப் பட்டால் அவர்கள் எழுத்துபூர்வமாக கோரிக்கையை முன்வைக்கலாம் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போதுள்ள அச்சுறுத்தல்களை ஆராய்ந்து, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பது உறுதி யானால் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப் படும் - என்றும்

07

## பாடசாலை நேரம் நீடிப்பு எந்த எதிர்ப்பும் இல்லை

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

மட்டக்களப்பு, நவ. 03

பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிப்பதில் எவ்வித பிரச்னையும் தோன்றவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு

07

## மாகாண சபைகள் தேர்தல்: இறுதிமுடிவு இப்போதில்லை

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 03

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், இந்த ஆண்டு இறுதி முடிவு எட்டப்படாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேர்தல் முறைமை குறித்து தீர்மானம் எட்டப்பட்ட பின்னரே மாகாண சபைகள் தேர்தல் தொடர்பான அடுத்தகட்ட

07

## ஹெரோயினுடன் இளைஞர் கைது!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், நவ. 03

ஹெரோயின் போதைப்பொருளுடன் 29 வயது இளைஞர் ஒருவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டார்.

07

## பாடசாலை நேரம் நீடிப்பு டிசெம்பரில் போராட்டம்!

### ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள்

கொழும்பு, நவ. 03

பாடசாலை நேரம் நீடிப்பு தொடர்பில் தாம் முன்வைத்த கோரிக்கைக்கு பதில் கிடைக்காதுவிடின் எதிர்வரும் டிசெம்பர் முதல் வாரம் முதல் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஆசிரியர் தொழிற்சங்க

07

### - 2026 வரவு - செலவு திட்டத்தில் -

## ஏற்றுமதியாளர், சிறு, நடுத்தர தொழில்களுக்கு சலுகைகள்!

கொழும்பு, நவ. 03

எதிர்வரும் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் ஏற்றுமதியாளர்கள் மற்றும் சிறு, நடுத்தர தொழில்களுக்கு சலுகைகளும் அத்தியாவசிய பொருட்களுக்கு

07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் ஆயுதம் மீட்பு

## சந்தேகநபர் குறித்து விசாரணை

கொழும்பு, நவ. 03

வவுனியா, கிரிபத்கொடை பகுதிகளில் அண்மையில் மீட்கப்பட்ட ஆயுதங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் குறித்து பொலிஸ் விசாரணைகளில் தகவல் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் "பிரவீன்" என்று அறியப்படுகிறாரென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விவகாரம் குறித்து விசாரிக்க சிறப்பு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் "பிரவீன்" தற்போது வெளிநாட்டில் இருக்கிறார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மையில், இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட மூன்று திட்டமிட்ட குற்றவாளிகள், கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்ட திட்டமிட்ட குற்றவாளிகளிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது "பிரவீன்" தொடர்பான தகவல்கள் வெளியாகின.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தென்னிலங்கை அரசியல்வாதிகள் யாழ். நூலகத்தை பார்வையிட்டனர்



யாழ்ப்பாணம், நவ. 03

இலங்கை தமிழ் அரசு கட்சியின் அழைப்பின் பேரில் வருகைதந்த தென்னிலங்கையை சேர்ந்த அரசியல் கட்சிகளின் இளம் தலைவர்கள் நேற்று யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தை பார்வையிட்டனர்.

14 அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 24 பேர் கொண்ட இளம் அரசியல் தலைவர்கள் குழு இந்தியாவுக்கு பயணித்த பின்னர் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்தனர்.

இதன்போது, வடக்கு மாகண மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் களப்பயணம் மேற்கொள்ளும் நோக்கத்துடன் வருகை தந்த குறித்த குழுவினர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரை புகையிரதத்தில் பயணித்து காங்கேசன்துறை துறைமுகம், மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் ஆகியவற்றுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தனர். (ஐ-03)

# நெல்லியடியில் கடை உடைத்து பணம், பொருட்கள் திருட்டு!

வடமராட்சி, நவ. 03

நெல்லியடியில் வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு பணம், பொருட்கள் என்பன திருடப்பட்டன.

உரிமையாளர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கடையை பூட்டிவிட்டுச் சென்றுள்ளார். மறுநாள் புதன்கிழமை காலை அவர் கடைக்கு வந்தபோது, கடையின் கூரை பிரிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

அத்துடன், கடையிலிருந்த பணம் மற்றும் பொருட்கள் என்பன திருடப்பட்டமை தெரிய வந்தது. இது தொடர்பில், கடை உரிமையாளர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-02)

# நாளை பரிசளிப்பு விழா

வடமராட்சி, நவ. 03

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி சத்தியபாமா நவரட்ணம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், பிரதம அதிதியாக கல்வி அமைச்சின் பாடசாலை அபிவிருத்தி பிரிவின் தமிழ் பிரிவு உதவிக் கல்வி பணிப்பாளர் திருமதி பாலராணி சிறீதரன், விசேட அதிதியாக கரவெட்டி கோட்ட கல்விப் பணிப்பாளர் வேலுப்பிள்ளை புவனேந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-02)

# ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி, நவ. 03

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆன்மீக மலரின் 334ஆவது இதழ் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், வெளியீட்டுரையை ஆசிரியர் துரை கணேசமூர்த்தி, மதிப்பீட்டுரையை சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ-02)

# வவுனியா பல்கலைக்கழக மாணவன் மர்ம மரணம்!

வவுனியா, நவ. 03

வவுனியா பல்கலைக் கழகத்தின் தகவல் தொழில் நுட்ப பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர் ஒருவர் வெள்ளிக் கிழமை இரவு உயிரிழந்தார்.

அவரின் மரணத்தில் மர்மம் நிலவுவதாக வவுனியா பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த 23 வயதான இளைஞரே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், மரணத்துக்கான காரணம் பிரேத பரிசோதனைக்கு பிந்தைய விசாரணையில் வெளிப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பூவரசன்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் பொலிஸார் இருவர் பணிநீக்கம்

யாழ்ப்பாணம், நவ. 03

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் நேற்றைய தினம் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால இதனை உறுதிப்படுத்தினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நால்வர் ஹெரோயினுடன் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நால்வரும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். பின்னர் பிரதான சந்தேகநபரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய பொலிஸார் அனுமதி கோரிய நிலையில் நீதிமன்று அதற்கு அனுமதி வழங்கியது.

தடுப்புக் காவல் விசாரணையின் பின்னர் குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார். இதன்போது, சந்தேகநபர் தப்பிச் சென்றிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலேயே பொலிஸார் இருவர் நேற்றைய தினம் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர். (ஐ)

# தெற்காசிய போட்டியில் பதக்கம் வென்ற மிதுன்ராஜுக்கு பாராட்டு



வடமராட்சி, நவ. 03

தெற்காசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்ற வடமராட்சியை சேர்ந்த மிதுன்ராஜின் சாதனையை பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பருத்தித் துறையில் நடைபெற்றது.

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தின் தலைநகர் ராஞ்சியில் உள்ள பிர்சா முண்டா உதைபந்தாட்ட விளையாட்டரங்கில் 4ஆவது தெற்காசிய மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது.

இதில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவனும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக வீரருமான சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் 14.68 மீற்றர் தூரத்தைப் பதிவுசெய்து வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

நீண்ட காலத்துக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவர் சர்வதேச ரீதியில் இலங்கை சார்பில் பங்கேற்று பதக்கம் வென்ற சந்தர்ப்பமாக இது அமைந்தது.

இந்த நிலையில், அண்மையில் நாடு திரும்பிய மிதுன்ராஜ் பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் மதிப்பளிக்கப்பட்டார்.

பருத்தித்துறை சித்தி விநாயகர் (பெரிய பிள்ளையார்) ஆலயத்தில் இறை வழிபாட்டைத் தொடர்ந்து சாதனை வீரனுக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து திறந்த வாகனத்தில் சாதனை வீரன் மிதுன்ராஜ் ஏற்பாட்டாளர்கள் மங்கல வாத்திய மரியாதையுடன் சூரியமஹால் திருமண மண்டபம் வரை பிரதான வீதியூடாக அழைத்து செல்லப்பட்டு மதிப்பளிப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். (ஐ-02)

# ஆடை உற்பத்தி நிலையத்துக்கு 30 ஆயிரம் ரூபாய் அபராதம்!

முல்லைத்தீவு, நவ. 03

சமையலுக்காக அழுகிய மரக்கறிகளை வைத்திருந்த குற்றத்துக்காக ஆடை உற்பத்தி நிலையம் ஒன்றுக்கு 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம்.

புதுக்குடியிருப்பை சேர்ந்த ஆடை உற்பத்தி நிலையம் ஒன்றுக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆடை உற்பத்தி நிலையத்தை கடந்த வெள்ளிக்கிழமை பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனையிட்டனர்.

அப்போது, சமையலறையில் பழுதடைந்த மற்றும் அழுகிய நிலையில் இருந்த மரக்கறிகள் சமையலுக்கு தயாராக வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

இது தொடர்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நடந்த விசாரணையில் நிறுவனம் குற்றத்தை ஏற்றுக் கொண்டது. இதையடுத்து, 30 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டதுடன், கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.10.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழர்களுக்கான இறுதித் தீர்வு

ஏக்கிய ராஜ்யவுக்குள் சமஷ்டி இருக்கிறதா அல்லது ஒற்றையாட்சி இருக்கிறதா என்னும் விவாதங்கள் இப்போதும் நடைபெறுகின்றன. ஏக்கிய ராஜ்ய என்பது வரமுடியாத அரசியல் யாப்பு பற்றிய உரையாடலுடன் தொடர்புடைய ஒன்று. தமிழ் மக்களின் பிரச்னையை இலங்கைத் தமிழ் அரசு கட்சி ஒற்றையாட்சிக்குள் முடக்கப் போவதாகப் பிரசாரம் செய்ய விரும்புவோர். "ஏக்கிய ராஜ்ய" என்னும் சொல் பிரயோகத்தை கையிலெடுக்கின்றனர்.

உண்மையான பிரச்னை என்னவென்றால் அரசியல் தீர்வு என்னும் பதாகையின்கீழ் எது நடந்தாலும் இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள்தான் நடக்கும் - ஆகக்குறைந்தது அரசமைப்பில் உள்ளவற்றையே அமுல்படுத்துவது பற்றி பொதுவெளியில் பேசுவதற்கு தயங்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது எவ்வாறு அதற்கு அப்பால் சென்று, புதிய அரசியல் யாப்பு ஒன்றை உறுதிப்படுத்த முடியும்?

இந்தக் கேள்வி தொடர்பில் சிந்திக்காமலேயே தமிழ்ச் சூழலில் அரசியல் யாப்பு தொடர்பில் விவாதங்கள் நடைபெறுகின்றன. தமிழ்ச் சூழலில் நடைபெறும் அரசியல் தீர்வு பற்றிய உரையாடல்களை ஒரு வரியில் கூறுவதாயின், "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படும் கதை" தான். ஒற்றையாட்சி நீக்கப்பட்ட அரசியல் யாப்பு ஒன்றின் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உறுதிப்படுத்தப்படுவது பற்றி ஆசைப்படலாம். ஆனால், அந்த ஆசையை நடைமுறையில் அடைவதற்கு எந்தவொரு வழியும் இல்லை.

ஒரு வகையில் தமிழில் சமஷ்டி பற்றியும் இப்போதும் வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றியும் பேசுவோர் கனவுலக நாயகர்களாகவே வலம் வருகின்றனர். ஆனால், அவர்கள் கனவு கண்டுகொண்டிருக்கும்போதே கட்டியிருக்கும் கோவணமும் அவர்களிடமிருந்து பறிபோகும் நிலையை அவர்களால் உணர முடியாமல் இருக்கிறது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கூறும் ஒரு விடயத்தை நிராகரிக்க முடியாது. அதாவது, பெயர்ப்பலகை முக்கியமல்ல மாறாக உள்ளடக்கமே முக்கியம். ஒருவேளை தமிழ் அரசுக் கட்சி கூறுவது போன்று உள்ளடக்கத்தில் அரசமைப்பின் பதின்மூன்றை விடவும் அதிகமான அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்படுமாக இருந்தால் அதனை ஆதரிக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நிகழப் போவதில்லை – தேசிய மக்கள் சக்திக்கு இருக்கின்ற அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டு அரிய விடயங்களைச் செய்ய முடியும் என்பது உண்மையாயினும், அவர்கள் அதனை செய்யாமல் விடுவதற்கான அரசியலே அவர்கள்மீது மேலாதிக்கம் செலுத்துகிறது.

தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தை எவ்வாறு பாதுகாப்பது என்னும் கேள்விக்கு முன்னால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை எந்த அடிப்படையில் வழங்குவது – எவ்வாறு வழங்குவது என்னும் கேள்விகள் பெறுமதியற்றவை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஏக்கிய ராஜ்ய, புதிய அரசியல் யாப்பு பற்றிய கதைகள் தமிழர் அரசியலுக்குத் தேவையான உரையாடல்கள் அல்ல. மாறாக, காலத்தை விரயம் செய்யும் உரையாடல்களாகவே முடிவுறும்.

இதுவரையான அரசியல் அனுபவத்திலிருந்து நோக்கினால் தமிழர்களுக்கு எவ்வாறான தீர்வு கிடைக்கும் என்னும் கேள்விக்கான பதில் - இறுதியில் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதாகவே முடிவுறலாம். ஏனெனில், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார இருப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்னும் கரிசனை எவருக்குமே இருப்பதாகத் தெரியவில்லை. ஒருவேளை அவ்வாறான நிலைமை இருந்திருந்தால், இவ்வாறான தேவையற்ற விவாதங்கள் நடைபெற வாய்ப்பில்லை. தமிழ் மக்களின் நலன்களில் அக்கறையுள்ளவர்கள் ஏக்கிய ராஜ்ய, சமஷ்டி - இவ்வாறான போக முடியாத ஊருக்கு வழிசொல்வதை விடுத்து, இன்றைய சூழலில் இலங்கையில் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி சிந்திப்பதும் செயல்படுவதுமே முதன்மையானது. ஒரு நிலைப்பாட்டை வைத்திருப்பதற்கும், நடைமுறையில் அரசியலை கையாள்வதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

## உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து விரைவில் வெளியேறும் சந்திரிகா



கொழும்பு, நவ. 03

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கொழும்பு 7 இல் அமைந்துள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து எதிர்வரும் சில நாள்களில் வெளியேறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் தமது சில உடைமைகளை அந்த வீட்டில் இருந்து தற்போது வெளியேற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை நீக்கும் சட்டமூலம் கடந்த செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டதையடுத்து பல முன்னாள் ஜனாதிபதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில் வெளியேறுவதற்கு கால அவகாசம் கோரியிருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவருக்கு வழங்கப்பட்ட இல்லத்தில் இருந்து விரைவில் வெளியேறவுள்ளார்.

முன்னதாக, இரண்டு மாதங்களுக்குள் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த செப்ரெம்பர் 12 ஆம் திகதி குறிப்பிட்டிருந்தார்.

அவர் கால அவகாசம் கோரியிருந்த இரண்டு மாத கால பகுதி நிறைவுக்கு வரவுள்ள நிலையில் தற்போது அதற்குரிய விடயங்களில் மும்முரம் காட்டி வருகிறார்.

முன்னதாக, 15 ஆண்டுகளுக்குள் இரண்டு முறை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சந்திரிகா, வயதான காலத்தில் வீட்டை விட்டு வெளியேறுவது கடினமாக இருந்ததால், அதே இடத்தில் தங்கக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மணலுடன் டிப்பர் பறிமுதல்: சாரதி கைது

யாழ்ப்பாணம், நவ. 03

மணல் கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்ட அனுமதியின் நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை யாழ்ப்பாணம் பொலிஸார் மடக்கிப் பிடித்து, சாரதியைக் கைது செய்துள்ளனர்.

அரசடி வீதி ஊடாக மணல் மண்ணுடன் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை பொலிஸார் சோதனை செய்தபோது, அனுமதிப் பத்திர நிபந்தனையை மீறி வாகனத்தில் மணல் ஏற்றிச் செல்வதனை கண்டறிந்தனர்.

அதனையடுத்து, சாரதியை கைது செய்த பொலிஸார், டிப்பர் வாகனத்தை மணலுடன் பறிமுதல் செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்ட சாரதியை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-03)

## ஹெரோயின் போதையுடன் ஐந்து இளைஞர்கள் கைது!


யாழ்ப்பாணம், நவ. 03

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதைத்தடுப்பு பொலிஸ் பிரிவின் விசேட நடவடிக்கையின் போது குருநகர், மணியந்தோட்டம், அரசடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப் பொருட்களை பொலிஸார் மீட்டுள்ள நிலையில், ஐவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அத்தோடு, அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-03)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் - 03 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - ஐப்பசி 17நல்ல
நேரம்:7.01 - 9.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகரதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். நிதானம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடிவருவார். உற்சாகமான நாள்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**கடகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். அக்கம்-பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப் போவீர்கள்.

**கன்னி**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பக்க பலமாக இருப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் வீடு களைக்கட்டும்.அமோகமான நாள்.

**விருச்சிகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**தனுசு**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். நீண்ட நாட்களாக வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள்.

**மகரம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகளை எடுப்பீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். நீண்ட நாள் பிரச்னை தீரும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள்.

# பெருமளவு கேரளக் கஞ்சா பொதிகளுடன் பருத்தித்துறை கடற்பரப்பில் மூவர் கைது




யாழ்ப்பாணம், நவ. 03
பருத்தித்துறை பொலிஸாரின் தீவிர கண்காணிப்பிலிருந்த மூன்று சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் பெருமளவு கேரளக் கஞ்சாவை கடற்பரப்பில் இறக்க முற்பட்டபோது கைது செய்யப்பட்டனர். பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையிலான பொலிஸார் சுற்றிவளைத்து 47 பொதிகளில் கொண்டுவரப்பட்ட கஞ்சாவை கைப்பற்றியதுடன் படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நபர்களும் கஞ்சா மற்றும் படகு உட்பட்ட பொருட்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இது குறித்து கருத்து தெரிவித்த பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி பிரியந்த அமரசிங்க, ஜனாதிபதியின் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் தொடர் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் பலர் கைது செய்யப்படவுள்ள தாகவும் தற்போது கைப்பற்றப் பட்ட கஞ்சாவின் பெறுமதி மூன்று கோடி ரூபாய்க்கும் அதிகம் என்றும் தெரிவித்தார். (எ-03)

# குன்றுப்பள்ளாறு அணைக்கட்டு திறப்பு

முல்லைத்தீவு, நவ. 03
உலக வங்கியின் 41 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு கமநல சேவை திணைக்களத்தின் கீழ் மல்லிகைத்தீவு கிராமத்தில் பேராற்றினை மறித்து கட்டிய குன்றுப் பள்ளாறு அணைக்கட்டு நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி சேகு கலந்துகொண்டார். சியாப் திட்டப்பணிப்பாளர் சமன்பந்துல, புதுக்குடியிருப்பு உதவிப் பிரதேச செயலாளர், கமநல சேவைத்திணைக்கள அதிகாரிகள், சியாப் திட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

மல்லிகைத்தீவு கமக்கார அமைப்பின் தலைவர் ஐயாமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு அணைக் கட்டுத் திறப்பு நிகழ்வு சிறப்புற நடைபெற்றது.

முத்தையன்கட்டு குளத்தின் கீழான பேராறு நீர் கடந்த காலங்களில் நந்திக்கடலில் கலந்து அது முல்லைத்தீவு கடலுடன் செல்கின்ற நிலை நீடித்தது. இந்த நீரினை மறித்து விவசாயம் செய்யும் நோக்கில் விவசாயிகளால் முன்வைக்கப் பட்ட கோரிக்கைக்கு அமைவாக புதுக்குடியிருப்பு கம நலசேவைத் திணைக்களத்தின் கீழ் உள்ள பகுதிகளில் ஆறு இடங்களில் இவ்வாறான அணைக் கட்டுகள் கட்டப் பட்டு இரு போகங்கள் விவசாய செய்கையை மேற்கொள்ளக்கூ டியவாறு அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மழையை நம்பியே காலபோக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் உலக வங்கியின் சுமார் 260 மில்லியன் ரூபாய் நிதியில் சியாப் திட்டத்தின் கீழ் ஆறு அணைக்கட்டுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் பேராறு எனப்படும் ஆறு ஊடாக அதிகளவான நீர் கடலுடன் சென்று கலக்கிறது. நீரினை வீணவிரயம் செய்யாது அதனை விவசாய செய்கைக்கு பயன்படுத்தி விவசாய வளர்ச் சிக்கு இந்த அணைக்கட்டுகள் உறுதுணையாக அமைந்துள்ளன.

பேராற்றினை மறித்து ஆறு இடங்களில் அணைக்கட்டுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு கட்டப்பட்டு வரும் அணைக்கட்டுகளில் ஒன்றான குன்றுப்பள்ளாறு அணைக் கட்டு கட்டி முடிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு கமநலசேவைத் திணைக்களத்தின் கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்ற ஆறு அணைக்கட்டுகளுக்கு கீழும் சிறுபோக விவசாய செய்கைக்காக சுமார் 1,800 ஏக்கர் வரை பயிர் செய்கை மேற்கொள்ளப்படும். அத்தோடு, 2000 விவசாயிகள் நன்மையடை யக்கூடியவகையிலும் இது அமைந்துள்ளது. (எ)

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு யாழ்ப்பாணத்தில் மொழிப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், நவ. 03
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான மொழிப் பயிற்சி நெறி, அரசகரும மொழிகள் திணைக்களமும் மற்றும் மாவட்ட சமுர்த்தி திணைக்களம் இணைந்து மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் பொ. சிறிவர்ணன் தலைமையில் நேற்று முன்தினம் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

இந்த பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டதுடன், மொழிப் பயிற்சி நெறிகளின் அவசியம், யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது நடைபெறுகின்ற மொழிப் பயிற்சி நெறிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதனை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மொழிப் பயிற்சி நெறிகள் எவ்வாறு அமைய வேண்டும் போன்ற விடயங்களை தெரிவித்தார்.

இவ் ஆரம்ப நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலாளர் தயாரூபன், மாவட்ட சமுர்த்தி திணைக்கள கணக்காளர் முருகதாஸ், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப் பாட்டுப் பிரிவின் வடமாகாண ஒருங்கிணைப்பாளருமாகிய ந. உமாநாத் மற்றும் அரசகரும மொழிகள் திணைக்கள வளவாளர் திருமதி சி. யோகராணி எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# ரூ. 4 கோடி பெறுமதியான கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 02
யாழ்ப்பாணத்தில் சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த படகொன்றை கடற்படையினர் அவதானித்து, அதனை மடக்கி சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது படகினுள் இருந்து, சுமார் 185 கிலோ நிறையுடைய கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட கஞ்சா சுமார் 41 மில்லியன் ரூபாய் பெறுமதியானது எனவும் மீட்கப்பட்ட கஞ்சா மற்றும் படகு என்பன வற்றுடன் கைது செய்யப்பட்ட இருவரையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகள் எவரும் பேரணியில் பங்கேற்கமாட்டார்கள்!

கொழும்பு, நவ. 03

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக எதிர்வரும் 21ஆம் திகதி நுகேகொடை நகரில் நடத்தப்படவுள்ள எதிர்கட்சிகளின் கூட்டுப் பேரணியில் முன்னாள் ஜனாதிபதிகள் எவரும் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இந்தப் பேரணியில் பங்கேற்க மாட்டார்கள்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதிகள் யாரும் இந்த எதிர்ப்பு பேரணியில் கலந்துகொள்ள கூடாது என்ற கருத்தை சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்திருந்தார். இதன் பின்னரே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இருப்பினும், அவர்களின் முழுமையான ஒத்துழைப்புகள் கிடைக்கும் என பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, எதிர்கட்சிகளின் கூட்டுப் பேரணியில் பங்கேற்பதில்லை என்று தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான அரசியல் முரண்பாடுகள் மீண்டும் வலுவடைந்து வருகிறது.

ரணில் விக்ரமசிங்க இந்த எதிர்ப்புக் கூட்டணியில் ஒரு தரப்பாக இல்லாவிட்டாலும், இந்தப் பேரணியின் பின்னணியில் உள்ள கட்சிகளில் பெரும்பாலானவை சஜித் பிரேமதாஸவின் நேரடி அரசியல் போட்டியாளரான ரணில் விக்ரமசிங்கவுடன் முன்பு கூட்டணி வைத்திருந்த கட்சிகளாக இருந்தன.

இதனால், சஜித்தின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, கூட்டணியின் நோக்கங்கள், தலைமைத்துவம் குறித்த சந்தேகம் காரணமாக, இந்த கூட்டு பேரணியில் இருந்து விலகி தனி வழியில் செயல்பட தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஐ)

# பாராளுமன்றத்துக்கு மீள வருவாரா ரணில்?

## உவமை கதை சொன்ன வஜிர



கொழும்பு, நவ. 03

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பாராளுமன்றம் வருவாரா? என்ற கேள்விக்கு அந்தக் கட்சியின் தவிசாளரான வஜிர அபேவர்த்தன வழங்கிய பதில் தற்போது அரசியல் வட்டாரங்களில் பேசும் பொருளாக மாறியுள்ளது.

அதாவது, "உங்கள் பாட்டன் அல்லது பாட்டி ஒரு பணப் பொதியை வீட்டில் கட்டி வைத்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஆனால், அந்தப் பொதியில் உள்ள பணம் குட்டி போடுவது இல்லை. அப்படியான ஒரு பணப் பொதியைத்தான் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டுக்கு விட்டுச் சென்றார்.

அந்தப் பொதியில் உள்ள பணம் தீரும் வரை நாம் செலவழிக்க முடியும். ஆனால், அந்தப் பணம் குட்டி போடாது என் பதை யாவரும் நினைவில் கொள்ள வேண்டும் என்று வஜிர அபே வர்த்தன குறிப்பிட்டார்.

மேலும், நாட்டின் பொருளாதாரம் குறித்தே இந்த உவமையை கூறினேன். நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருகிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தேசிய தேவையின் நிமித்தம் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதைச் செய்வது மிகவும் எளிமையான காரியம்.

எனவே, கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து தீர்க்கதரிசனங்களை கூறினேன். அது அவ்வறே இடம்பெற்றது.

இப்போதும் ஒரு தீர்க்க தரிசனத்தை முன்வைக்கிறேன். அதாவது, ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த பொருளாதார திட்ட பாதையை அரசாங்கம் மாற்றக்கூடாது.

அந்தப் பாதையை மாற்றினால், இந்த நாட்டு மக்கள் மீண்டும் ஒரு பெரும் அழிவுக்கு உள்ளாவார் கள் - என்றார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, நவ. 03

பல குற்றங்களுக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு பிரிவு குற்றப் புலனாய்வு பணியகத்தால் மோதரை - லெல்லம பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து, 26 கிராம் 890 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ள துடன், அவரை மோதரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (ஐ)

# விபத்துகளில் நால்வர் பலி!

கொழும்பு, நவ. 03

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் நால்வர் உயிரிழந்தனர்.

இதன்படி, நிட்டம்புவை பொலிஸ் பிரிவில் கொழும்பு - கண்டி பிரதான வீதியின் திஹாரிய பகுதியில் மோட்டார் சைக்கிள் பாதசாரியை மோதித் தள்ளியது.இதில், உயிரிழந்தவர் வத்துபிட்டிவலையைச் சேர்ந்த 61 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலாவை பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிளும் டிராக்டரும் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய 29 வயது நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். அத்துடன், குழந்தை ஒன்று காயமடைந்தது.

குருநாகலில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் கவிழ்ந்ததில் அதனை செலுத்திச் சென்ற 23 வயது இளைஞர் உயிரிழந்தார்.

புத்தளத்தில் முன்னே சென்ற லொறியே பின்னே வந்த லொறி மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். 4 பெண்கள் காயமடைந்துள்ளனர். (ஐ)

# வத்திக்கானின் வெளிவிவகாரத்துக்கு பொறுப்பான பேராயர் இன்று வருகிறார்

கொழும்பு, நவ. 03

வத்திக்கானின் வெளிவிவகார விடயங்களுக்கு பொறுப்பான பேராயர் போல் றிச்சர்ட் கல்லாகர் இன்று திங்கட்கிழமை நாட்டுக்கு வருகை தருகிறார்.

வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் அழைப்பை ஏற்று நாட்டுக்கு வருகை தரும் அவர், எதிர்வரும் 8ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்து பல முக்கிய சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரையும் சந்திப்பார்.

இலங்கைக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 20ஆவது ஆண்டு நிறைவுடன் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் மோதலுக்கு பின்னரான நல்லிணக்கத்துக்கு ஆதரவளிப்பதில் திருச்சபையின் தொடர்ச்சியான ஈடுபாட்டை இந்தப் பயணம் அடிக்கோடிட்டு காண்பிப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# சினொபெக் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கான திட்டம் இறுதிக்கட்டம்

கொழும்பு, நவ. 03

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட சீனாவின் சினோபெக் நிறுவனத்தின் 370 கோடி டொலர் முதலீட்டில் அம்பாந்தோட்டையில் அமையவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

சீனா கோரிய மேலதிக காணி உள்ளிட்ட அனைத்து முக்கிய தொழில்நுட்ப மற்றும் நடைமுறை தடைகளும் நீக்கப்பட்டு விட்டதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும், இந்தத் திட்டம் தாமதமாவதற்கு முக்கிய காரணமாக இருந்த, சினோபெக் நிறுவனம் கோரியிருந்த மேலதிக காணி ஒதுக்கீடு தொடர்பான விவ காரம் இப்போது தீர்க்கப்பட் டுவிட்டது.

ஆரம்பத்தில் 500 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவை ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் பீப்பாய்களில் இருந்து 2 இலட்சம் பீப்பாய்களாக அதிகரிப்பதற்காக சினோபெக் நிறுவனம் மேலதிகமாக சுமார் 200 ஏக்கர் காணிகளை கோரியிருந்தது.

இந்தக் காணி ஒதுக்கீடு, அத்துடன் வரிச் சலுகைகள், நீர் விநியோகம் போன்ற ஏனைய முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் சீனத் தூதரகம் மற்றும் சினோபெக் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் ஆக்கபூர்வமாக முடிவடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பத்மேவின் ஆயுத கடத்தல் குறித்து பொலிஸ் விசாரணை

கொழும்பு, நவ. 03

பாதாள உலகக் குழு ஒன்றின் தலைவராக கருதப்படும் கெஹல் பத்தர பத்மே ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டிருந்தார் என்று மேற்கு மாகாண வடக்கு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியின்படி,கெஹல்பத்தர பத்மே துப்பாக்கி கடத்தலில் ஈடுபட்டதாக மேற்கு மாகாண வடக்கு குற்றப்பிரிவுக்கு அண்மையில் தகவல் கிடைத்தது.

இதன்படி, உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் ரோஹன் ஒலுகலவின் நேரடி மேற்பார்வையிலும், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் ஆய்வாளர் லிண்டன் சில்வா வின் வழிகாட்டுதலிலும் விரி வான விசாரணை தொடங்கப் பட்டது.

மினுவங்கொடையில் வசிக்கும் ஒரு தொழிலதிபர் நேற்று முன்தினம் ஒரு கைத்துப் பாக்கி மற்றும் 13 தோட்டாக் களுடன் கைது செய்யப்பட் டார். விசாரணையின் போது, கெஹல்பத்தர பத்மேவுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருப்பது தெரியவந்தது.

சந்தேக நபரான தொழிலதிபர், ஹீனட்டியன மகேஷ் என்ற குற்றவாளியிடமிருந்து தனக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் கடந்த ஆண்டு அவரை சுட்டுக் கொல்ல முயன்றதாகவும் பொலிஸாரிடம் தெரிவித் திருந்தார்.

இதன்படி, கெஹல்பத்தர பத்மேவிடம் இருந்து 13 தோட்டாக்கள் கொண்ட ஒரு துப் பாக்கியை வாங்கியதாக சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

அந்தத் துப்பாக்கிக்கு, முதலில் பத்மே 5 இலட்சம் ரூபாய் கேட்டார் என்றும் பின்னர் அதனை மூன்றரை இலட்சம் ரூபாயாகக் குறைத்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 687 பேர் கைது!

கொழும்பு, நவ. 03

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப் பட்ட விசேட சுற்றிவளைப்பில் 687 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

29 ஆயிரத்து 20 பேர் பரிசோதிக்கப்பட்டு அதில், 687 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றங்களுடன் தொடர்புடைய, நேரடியாக அடையாளம் காணப்பட்ட 21 பேரும் அத்துடன், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 254 பேரும் திறந்த பிடியாணை பிறப்பிக் கப்பட்ட 150 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 26 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 21 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# போதைப்பொருட்களுடன் ஆயிரத்து 314 பேர் கைது!

கொழும்பு, நவ. 03

"முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 314 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு முழுவதும் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

கைதானவர்களில் 31 பேர் தடுப்புக்காவல் உத்தரவுகளைப் பெற்றுள்ளதுடன், சட்டவிரோதமாக போதைப்பொருட் களை கொண்டுவந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 8 பேர் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 863 கிராம் 137 மில்லிகிராம் ஹெரோயின், ஒரு கிலோகிராம் 202 கிராம் 247 மில்லிகிராம் ஐஸ், ஒரு கிராம் 42 மில்லிகிராம் கொக்கெய்ன், 197 கிலோகிராம் 298 கிராம் 971 மில்லிகிராம் கஞ்சா, 50 ஆயிரத்து 823 கஞ்சா செடிகள், 6 கிராம் 72 மில்லிகிராம் குஷ்ரக போதைப்பொருள், 20 கிராம் 783 மில்லி கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1,415 போதை மாத்திரைகள் மற்றும் 993 கிராம் 748 மில்லி கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தகெட்டிய பாடசாலையை சேதப்படுத்திய காட்டு யானை

பதுளை, நவ. 03

பதுளை மாவட்டம், கந்த கெட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கந்தகெட்டிய ஆரம்பப் பாடசாலைக்குள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நுழைந்த காட்டு யானைகள் கூட்டம் பிரதான வாயில், அறி விப்பு பலகைகள், கொன்கிரீட் தூண்கள் ஆகியவற்றை சேதப்ப டுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரந்தெனிகல வனப்பகுதியிலி ருந்து உணவு தேடி வந்த நான்கு காட்டு யானைகள், பாடசாலை யின் பின்புறம் இருந்து பாடசா லைக்குள் நுழைந்ததாக பொலி ஸார் தெரிவித்தனர்.

பாடசாலை மைதானத்தில் சிறிது நேரம் கழித்த காட்டு யானைகள் கூட்டம், மீண்டும் வெளியேற முயன்றது, பிரதான வாயில், அறிவிப்பு பலகைகள் மற்றும் கொன்கிரீட் தூண் களை சேதப்படுத்தி சேதத்தை ஏற்படுத்தியது, பின்னர் பிர தான வாயிலிலிருந்து வெளி யேறி பிரதான வீதியை அடைந் ததாக பொலிஸார் தெரிவித் தனர்.

பின்னர், வனவிலங்கு அதிகாரிகள் வந்து தீ வைத்து, காட்டு யானைகள் கூட்டத்தை ரன்தெனிகல சரணாலயத்துக் குள் விரட்டியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த காட்டு யானைகள் கூட்டம் பாடசாலைக்கு அரு கிலுள்ள வாழைத் தோட்டத் தையும் அழித்துள்ளது. (எ)

எனது உயிருக்கு தொடர்ந்து அச்சுறுத்தல்

## பாதுகாப்பு வழங்க கோருகிறார் அம்பிட்டியே சுமணரத்ன தேரர்!

மட்டக்களப்பு, நவ. 03



தனது உயிருக்கு தொடர்ந்து அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறி, மட்டக்களப்பு மங்கள ராம விகாராதிபதி அம்பிட் டியே சுமணரத்ன தேரர், ஜனா திபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளரிடம் உடனடி பாதுகாப்பு கோரியுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர கள் தலைமறைவாக இருப்ப தாக தேரர் தெரிவித்தார்.

ஒகஸ்ட் 30 ஆம் திகதி தனது பாதுகாப்புக்காக நியமிக்கப் பட்ட ஐந்து சிவில் பாதுகாப் புப் படை அதிகாரிகள் நீக்கப் பட்டனர். இது ஒரு கடுமை யான பாதுகாப்பு இடைவெ ளியை உருவாக்கியது என்றும் அவர் கூறினார். ஒகஸ்ட் 15 ஆம் திகதி காட்டு யானைக ளால் விகாரையின் தர்மசா லைக்கு சேதம் ஏற்பட்டதாகக் கூறிய மகா ஓயா சிவில் பாது காப்புப் படை கட்டளை அதி காரியுடனான கலந்துரையாட லைத் தொடர்ந்து இந்த நீக்கம் செய்யப்பட்டதாக தேரர் கூறி னார்.

அம்பாறை - ரஜமகா விகா ரையில் நேற்று அதிகாலை 02.00 மணியளவில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே இவ்வாறு குறிப் பிட்டார். (எ)

## பெரும்போக நெற் செய்கைக்கான தயார்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

திருகோணமலை, நவ. 03

தற்போது பெரும்போக நெற் செய்கைக்கான நடவடிக் கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிர தேச செயலாளர் பிரிவில் உள்ள வயல் நிலங்களிலும் இதற்காக விவசாயிகள் நிலத்தை சமப்ப டுத்தும் நடவடிக்கையில் ஈடு பட்டு வருகின்றனர்.

இயந்திரத்தை கொண்டு குறித்த விவசாய நிலங்களை சமப்ப டுத்தி வருகின்றனர்.

தம்பலகா மம், முள்ளிப் பொத்தானை உள்ளிட்ட பல விவசாய நிலங் களில் நெற் செய்கை விவசாயத் துக்காக விதைப்பு நடவடிக் கையை மேற்கொள்ள விவசா யிகள் தயாராகி வருகின்றனர். (எ-12)

## மீனவரை அச்சுறுத்தி பணம் கொள்ளை சந்தேகநபரை கைது செய்த பொலிஸார்

கல்முனை, நவ. 03

மீனவரை மிரட்டி அச்சு றுத்தி ஒரு தொகை பணத்தை கொள்ளையிட்டு சென்ற சந்தே கநபரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

மீன்பிடித்து ஜீவனோபாயம் செய்து வரும் நபரை பின்தொ டர்ந்த சந்தேகநபர் குறித்த மீனவரை மிரட்டி அச்சுறுத்தி அவர் வசம் வைத்திருந்த பணத்தை கொள்ளையிட்டு சென்றிருந்தார்.

இது குறித்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கமைய துரிதமாக செயல்பட்ட பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி. கஜேந்தி ரன் தலைமையிலான பொலிஸ ார் சந்தேகநபரை கைது செய் தனர். (எ-01)

# புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 03

புதிய கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பிரத மர் ஹரிணி அமரசூரிய தெரி வித்தார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, மட்டக்களப்பு- பட்டிருப்பு தேசிய பாடசாலைக்கு நேற்று முன்தினம் பயணம் மேற் கொண்டார். இதன்போது நடைபெற்ற நிகழ்வில் பிரதமர் உரையாற்றுகையில், "பாடசா லைகளில் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்னைகளை நாம் இயன்றவரை கருத்தில் கொண் டுள்ளோம். தற்போதைய கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும். அந்தவகையில்



அமுல்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்தை நடைமு றைப்படுத்துவதற்கு அனைவ ரும் ஒத்துழைப்பு வழங்க வேண் டும்."- என்றார்.

பிரதமருக்கு பாடசாலை சமூகத்தினரால் ஞாபகச்சின்னம் வழங்கப்பட்டதுடன் பாட சாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பழைய மாணவர் சங் கத்தினராலும் ஞாபகச் சின்னங் கள் வழங்கப்பட்டன. (எ)

## கஞ்சா வளர்த்த தொழிலாளி கைது

நுவரெலியா, நவ. 03

மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்டத்தின் எமிலினா பிரி வில் உள்ள ஒரு காய்கறித் தோட் டத்தில் சட்டவிரோதமாக இரண்டு கஞ்சா செடி களை பயிரிட்டதாக சந்தேகத் தின் பேரில் மஸ்கெலியா பொலிஸ் துறை அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று ஒரு தோட்டத் தொழிலாளியை கைது செய்தனர்.

மஸ்கெலியா பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி எஸ். புஷ்பகு மாரவுக்கு கிடைத்த தகவலின் பேரில் இந்த சோதனை மேற் கொள்ளப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா செடிகளுடன், சந்தேக நபர் ஹற்றன் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, சந்தேக நபரை ஐந்து இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடு வித்து, எதிர்வரும் 11 ஆம் திகதி யன்று ஆஜராகுமாறு உத்தர விட்டுள்ளார். (எ)

## நிந்தவூர், ஒட்டமாவடி தவிசாளர்கள் உறுப்புரிமையை இழந்தனர்!

நிந்தவூர், நவ. 03

நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் ஆதம்பாவா அஸ் வர், அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் கட்சியின் உறுப் பினர் பதவியிலிருந்து நீக்கப் பட்டுள்ள தாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட் டுள்ளது.

இதற்கமைய ஆதம்பாவா அஸ்வர் வகித்து வந்த நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினர் பதவியை இழந்துள்ளதாக நிந்தவூர் பிரதேச சபைக்கான தெரிவத்தாட்சி அலுவலர் சுசன் சிறீநாத் அத்தநாயக்க வர்த்த மானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இது குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கான பிரகடனத் தில் நிந்தவூர் பிரதேச சபைக் கான தெரிவத்தாட்சி அலுவலர் ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி ஒப்பமிட்டு வெளிப்படுத்தியுள் ளார்.

இதேபோன்று கோறளைப் பற்று மேற்கு ஒட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் எம். பைரூஸ் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பதவியி லிருந்து நீக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய அவர் கோற ளைப்பற்று மேற்கு (ஓட்ட மாவடி பிரதேச சபை யின்) உறுப்பினர் பதவியை இழந்துள்ளதாக கோறளைப் பற்று மேற்கு பிரதேச சபைக் கான தெரிவத்தாட்சி அலுவலர் நாகலிங்கம் ரேசன் பிரகடனப் படுத்தியுள்ளார்.

இது குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கான பிரகடனத் தில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்கான தெரிவத் தாட்சி அலுவலர் 10 மாதம் 24 ஆம் திகதி ஒப்பமிட்டு வெளிப்படுத்தியுள்ளார்.

# "சவாலான பகுதிகளில் உள்ள பாடசாலைக்கு விசேட ஆதரவு"

மட்டக்களப்பு, நவ. 03

புதிய கல்விச் சீர்திருத்தத் தின் மூலம் சவாலான பகுதி களில் உள்ள பாடசாலைக ளுக்கு விசேட ஆதரவு வழங்கப் படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். அர சாங்கம், அதிகாரிகள் மற்றும் மக்கள் இணைந்து செயல்பட் டால் தீர்க்க முடியாது என்ற பிரச்னை எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத் தில் உள்ள கல்குடா மற்றும் ஏறாவூர் வலயக் கல்வி அலுவ லகங்களுக்கு நேற்று முன்தினம் சென்றபோது கல்வி அதிகாரி கள், ஆசிரியர்கள் மற்றும் பெற் றோர்களைச் சந்தித்து 2026 சீர்திருத்தங்களுக்கான தயாரிப் புகள் குறித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.




பாடசாலை பெறுபேறுக ளைப் பொறுத்தவரை கூட, மட்டக்களப்பு ஒரு கடினமான பகுதி. அதனால்தான் இங்கு கூடுதல் ஆதரவை வழங்குவதில் நாங்கள் கவனம் செலுத்துகி றோம் என்றும் பிரதமர் கூறி னார்.

ஒவ்வொரு குழந்தையும் தரமான கல்வியைப் பெற பாடசாலைகள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாகத்தை மேம்படுத்த வேண் டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார். நாட்டை வளர்ப்பதற்கு கல்வி முக்கியமா னது. ஒன்றாக வேலை செய்வ தன் மூலம், எந்தவொரு சவால்க ளையும் நாம் சமாளித்து, அனைத்து குழந்தைகளுக்கும் நல்ல எதிர் காலத்தை வழங்க முடியும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.40,000...

கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படை ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதில், 5 ஆயிரத்து 267 கிலோ கேரள கஞ்சா, 8 ஆயிரத்து 39 கிலோ ஹெரோயின், 2 ஆயிரத்து 38 கிலோ ஐஸ் மற்றும் 33 ஆயிரம் கிலோ ஹஷிஷ் போதைப்பொருட்கள் அடங்கும். மேலும், 16 இலட்சத்து 83 ஆயிரத்து 691 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டன - என்றும் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

## பாதுகாப்பு கோரு...

நாட்டில் தோன்றியுள்ள உலகளாவிய பயங்கரவாதம், இஸ்லாமிய தீவிரவாதம் குறித்து பல்வேறு வெளிப்படுத்தல்களால் தனக்கு பாதுகாப்பு அடிப்படையில் ஆபத்து உள்ளது என்றும் அரசாங்கத்திடம் உரிய பாதுகாப்பைக் கோரிய போதிலும் இன்னும் கிடைக்கவில்லை எனவும் அந்தக் கடிதத்தில் ஞானசார தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## ஹெரோயினுடன்...

ஆனைக்கோட்டை - ஆறுகால்மடம் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட அவரிடம் 3.5 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஏற்றுமதியாளர்...

நிவாரணமும் வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேநேரத்தில் வரி வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளது.

வரி வசூலை உறுதி செய்வதன் மூலம் சுங்கம், உள்நாட்டு இறைவரி மற்றும் மதுவரி துறையிலிருந்து வருமான இலக்குகளை உயர்த்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்படி, இந்த மூன்று நிறுவனங்களுக்கும் 4.6 இலட்சம் கோடி ரூபாய் என்ற மதிப்பிடப்பட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தற்போதைய இலக்கை காட்டிலும், 60 கோடி ரூபாய் அதிகரிப்பாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு, அந்நிய நேரடி முதலீடுகள் மற்றும் ஏற்றுமதிகளை அதிகரித்து அந்நிய செலாவணியை திரட்டக்கூடிய நடவடிக்கைகளையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளது.

அத்துடன், வாகன இறக்குமதிக்கு விதிக்கப்படும் வரிகளும் மாறாமல் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் கொண்ட குழுக்களுக்கு, அரசாங்கம் பாதீட்டில் நிவாரணப் பொதியை அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் 2025 ஜூன் இறுதி நிலவரப்படி அரசாங்கத்தின் வெளிநாட்டு கடன் 3 ஆயிரத்து 710 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. மொத்த அரச வெளிநாட்டுக் கடனில் பல தரப்பு கடன் 36 சதவீதமாகும். இதைத் தொடர்ந்து வணிகக் கடன் 34 சதவீதமாகவும், இருதரப்புக் கடன் 30 சதவீதமாகவும் உள்ளது. (ஐ)

## பாதுகாப்பு...

தெரிவிக்கப்பட்டது. இதனிடையே, பாரா ளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பாதுகாப்புக்கு கைத்துப்பாக்கி வழங்குமாறு கோரிக்கை விடுத் திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

## ஈழத்தமிழரின்...

கூட்டத்தொடரை தொடர்ந்து, அண்மையில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவை சந்தித்தார். இதன்போது, இது தொடர்பில் பல விடயங்களை கலந்துரையாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாகாண...

நடவடிக்கை இடம்பெறும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தலை புதிய முறைமையில் நடத்துவதற்காக பழைய முறைமை கடந்த காலத்தில் இரத்து செய்யப்பட்டது. எனினும், இதற்கான நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை. எனவே, மாகாண சபைகள் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது பற்றி முதலில் தீர்மானத்துக்கு வரவேண்டும்.

அதற்காக அனைத்துக் கட்சிகளின் இணக்கத்துடன் சிறந்த முறைமையை அறிமுகப்படுத்திய பின்னர் தேர்தல் நடத்தப்படும். இந்தநிலையில், ஜனநாயகத்தை வெளிப்படுத்துவதற்காக மக்களுக்கு உள்ள உரிமையை அரசாங்கம் தடுக்காது. எனினும், தேர்தல் திகதி பற்றி தற்போது உறுதியாகக் கூறமுடியாது - என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

## கத்தோலிக்க...

ஒன்றுபட வேண்டிய இடத்தில் ஒன்றுபடுவதும் இணைந்து பணியாற்ற வேண்டிய இடத்தில் இணைந்து பணியாற்றுவதும் முக்கியமானதாக அமைந்து காணப்படுகின்றன. ஐந்தரை வருடங்களேயான ஐக்கிய மக்கள் சக்தி தற்போது 1,773 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும், 39 உள்ளூராட்சி தவிசாளர்களையும், 21 பிரதித் தவிசாளர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நாட்டில் உள்ள 340 உள்ளூராட்சி மன்றங்களில் 100இற்கும் மேற்பட்டவற்றின் தவிசாளர் பதவி எதிர்க்கட்சிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பதவியையும் பாராளுமன்ற பெலும்பான்மை, பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரமும் அரசாங்கத்திடம் இருக்கும் போது, இன்று அரசாங்கம் இயலாமையால் வீழ்ச்சிப் பாதையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது - என்று கம்பஹாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் குறிப்பிட்டார். (ஐ)

## மட்டு எல்லை...

மத வழிபாட்டுத்தலம் ஒன்றை உருவாக்குவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டது.

எந்த ஒரு பௌத்த - சிங்கள குடிமகனும் வாழ்ந்திராத இடத்தில் - நெடியகல்மலையில் 15 கிலோமீற்றருக்கு அப்பால் இருந்து பௌத்த துறவிகள் வந்து, பௌத்த வழிபாட்டுத்தலத்தை அமைக்கிறார்கள்.

கடந்த காலத்தில் இந்த மாவட்டத்தில் இராஜாங்க அமைச்சர்கள் இருவர் இருந்தார்கள். அவர்களுடைய காலத்தில் இது ஆரம்பிக்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர்களாக இருந்தமையாலும் - அரசாங்கத்தின் சலுகைகளை பெறுகிறார்கள் என்ற காரணத்தாலும் இந்த விடயங்களை அவர்கள் கண்டும் காணாததுபோல் விட்டுவிட்டார்கள்.

இப்போது இருக்கின்ற ஆட்சியில் கூட அதன் தொடர்ச்சி காணப்படுகிறது. வன இலாகாவுக்கு சொந்தமான இந்தப் பகுதியில் பௌத்த வழிபாடுத்தலம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்போது சர்வசாதாரணமாக அங்கு இந்த பௌத்த வழிபாட்டுத்தலம் அமைக்கப்படுகிறது.

அங்கு பௌத்த துறவிகள் வந்து செல்ல வேண்டிய தேவை இருக்கிறது. காலப்போக்கில் அவர்கள் தங்குவதற்கான விடுதிகள் அனைத்தும் அமைக்கப்படும். பின்னர் அவர்களை பராமரிப்பதற்கும் சேவை செய்வதற்கும் சிங்கள மக்களை குடியேற்ற வேண்டிய தேவையேற்படும் - அவற்றுக்கு ஏதும் பிரச்னைகள் ஏற்படுமிடத்தில் அங்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலைமை ஏற்படும் - இராணுவ கட்டமைப்பை நிறுவ வேண்டிய நிலை ஏற்படும். எனவே, கிழக்கு மாகாணத்தை இவ்வாறு திட்டமிட்டு தமிழ் மக்களிடமிருந்து ஆக்கிரமிப்பதற்கான ஒரு செயல்பாடாகத்தான் இந்த செயல்பாட்டை நாம் பார்க்க முடிகிறது.

நல்லாட்சி, நல்லிணக்கம், சமரசம் போன்றவற்றையெல்லாம் சிந்திக்கின்ற இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயத்தை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். குருந்தூர்மலையில் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த அதிகாரி பௌத்த இடிபாடுகளுடனான விடயங்களை அவ்விடத்தில் விதைத்துவிட்டு அங்கு பௌத்த வழிபாட்டுத்தலம் எப்போதோ இருந்திருக்கிறது என்பதை தாங்கள் அவ்விடத்தில் இட்ட சின்னங்களை வைத்துக் கொண்டு அடையாளப்படுத்தி இருப்பதாக ஒரு பௌத்த துறவி தெரிவித்திருந்தார். இதுபோல் கிழக்கிலும் புதிதாக பௌத்த வழிபாட்டுத் தலம் ஒன்று அமைக்கப் பட்டு கொண்டிருக்கிறது. அதற்குரிய வீதியையும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் அமைத்துக் கொண்டிருக்கிறது. இந்த விடயம் குறித்து மக்கள் அச்சமடைந்துள்ளார்கள்.

எனவே, ஜனாதிபதியிடமும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடமும் - குறிப்பிட்ட மதத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தும் மக்கள் வசிக்காத பிரதேசங்களில் அவர்கள் சாராத வழிபாட்டு தலங்கள் அமைப்பது என்பது நல்லிணக்கம் அல்லது சமரசமான வாழ்வுக்கான சூழ்நிலையை குழப்பும்.

மயிலத்தமடு, மாதவனை பகுதிகளையும் பொலநறுவையை சேர்ந்து பெரும்பான்மையின மக்கள் வந்து ஆக்கிரமித்து அங்கு இருக்கின்ற தமிழ் மக்களுக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் புறங்களில் பெரும்பான்மையின மக்களால் தொல்லைகள் கொடுக்கப்படுகின்றன. கால்நடைகளை வளர்க்க முடியாமல் உள்ளார்கள். எனவே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் இதயசுத்தியுடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# எம். பிக்கள் துப்பாக்கி வைத்திருப்பது ஆபத்து

### சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 03

பாராளுமன்ற உறுப்பினர்கள் துப்பாக்கி வைத்திருப்பது ஆபத்தானது என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பாதுகாப்புக்கு துப்பாக்கி கோரியமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ் பாதுகாப்பு அல்லது துப்பாக்கி கேட்பது அவர்களின் தனிப்பட்ட உரிமை. உறுப்பினர்கள் துப்பாக்கி வைத்திருப்பது ஆபத்தானது. இது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பாராளுமன்ற ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டம்?

கொழும்பு, நவ. 03

வரவு - செலவுத் திட்ட காலப் பகுதியில் பாராளுமன்ற ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர் என்று பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற நிர்வாகத்தை மறுசீரமைப்பது தொடர்பான குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கூறப்படுகிறது.

மறுசீரமைப்பு தொடர்பான குழுவின் அறிக்கை தற்போது மேலதிக ஆய்வுக்காக பாராளுமன்றத்தின் துறைசார் பிரதானிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை தொடர்பில் ஊழியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

பாராளுமன்றத்தில் 9 பிரிவுகள் உள்ளன. அங்கு, சுமார் 850 ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். ஊழியர்கள் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் அதிகாரபூர்வமற்ற வகையில் இணக்கப்பாடு ஒன்றை எட்டியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## பாடசாலை ஹரினி...

கூறினார்.

மேலும், பிற்பகல் 2 மணி வரை பாடசாலை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தெரிவிக்கப்பட்ட நிலையில் அதற்கு சாதகமான பதில்களே அதிகமாகக் கிடைத்துள்ளன என்றும் பிரதமர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

## பாடசாலை...

பிரதிநிதி ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எந்த எதிர்ப்பும் இல்லை எனப் பிரதமர் ஹரிணி வெளியிட்ட கருத்துக்கு கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மட்டக்களப்பில் பிரதமர் இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தாலும் இந்த முடிவுக்கு எதிராக அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து - கையெழுத்திட்டு கல்வி அமைச்சுக்கு எழுத்துமூலம் தெளிவாக அறிவித்துள்ளோம் என்று ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

எந்தவோர் ஆய்வு அடிப்படையுமின்றி, தேசிய கல்வி நிறுவகத்தின் பெயரால் கல்வி அமைச்சர் இந்த முடிவை தன்னிச்சையாக வெளியிடுவதாகக் கண்டித்த அவர், இந்த முடிவில் எந்த நடைமுறைத் தன்மையும் இல்லை.

எமது கோரிக்கைக்கு வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் உரிய பதில் அளிக்காவிட்டால், டிசெம்பர் முதல் வாரத்தில் நாட்டிலுள்ள அனைத்து அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் - என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கொழும்பிலிருந்து கொக்கைன் கடத்திய ஐவர் மும்பையில் கைது

மும்பை, நவ. 03

கொழும்பிலிருந்து மும்பைக்கு சென்ற விமானத்தில் சுமார் 160 கோடி ரூபாய் (47 கோடி இந்திய ரூபாய்) பெறுமதியான போதைப்பொருளுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் மும்பை சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பெண் பயணி ஒருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

9 தேயிலை, கோப்பி தூள் பைக்கெற்றுகளில் மறைத்துக் கடத்தப்பட்ட 4.7 கிலோ கொக்கைன் போதைப்பொருளே இவ்வாறு கைப்பற்றப்பட்டது. இதன் மதிப்பு 47 கோடி இந்திய ரூபாயாகும். (ஐ)

## வெளிநாடு அனுப்புவதாக 74 கோடி ரூபாய் நிதி மோசடி!

### வேலை வாய்ப்பு நிறுவன உரிமையாளர் சரண்

கொழும்பு, நவ. 03

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 74 கோடி ரூபாய்க்கும் மேல் மோசடி செய்தார் என்று கூறப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன உரிமையாளர் ஒருவர் நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

கொழும்பு - மகரகமவில் இயங்கிய நிறுவனத்தின் உரிமையாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டு எதிர்வரும் 14ஆம் திகதி வரை நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ருமேனியாவில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதாக்கூறி வேலை தேடுபவர்களிடமிருந்து பெருந்தொகையை அவர் மோசடி செய்தார் என்று கூறப்படுகிறது. 470 முறைப்பாடுகளுக்கு அமைய சந்தேகநபர் தேடப்பட்டார்.

இந்த நிலையில், சந்தேகநபர், தனது சட்டத்தரணிகள் மூலம் கடந்த வியாழக்கிழமை கங்கொடவில நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்தார். இதைத் தொடர்ந்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (ஐ)

## மஹாபொல நிதி முறைகேடு விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, நவ. 03

மஹாபொல புலமைப்பரிசிலில் நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு தண்டனை பெற்று தற்போது சிறையில் உள்ள முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவின் காலத்தில் நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனடிப்படையில், முன்னாள் அமைச்சரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்வதற்கு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இருப்பினும், அவர் தனது சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்த பின்னரே வாக்குமூலம் அளிப்பதாக அதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

இந்நிலையில், அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்ய நீதிமன்ற உத்தரவைப் பெற ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

மஹாபொல புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதிச் சட்டத்தின்படி, நிதி தொடர்பான முடிவுகள் நிதியின் தலைவருடன் கலந்தாலோசித்து எடுக்கப்பட வேண்டும். எனினும், குறித்த காலத்தில், அவரை கலந்தாலோசிக்காமல் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ஐ)

## சீதை அம்மன் ஆலயத்தில் 6 உண்டியல்கள் உடைப்பு!

நுவரெலியா, நவ. 03

வரலாற்றுச் சிறப்புமிக்க சீதை அம்மன் ஆலயத்தி லுள்ள 6 உண்டியல்கள் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.இது தொடர்பில் ஆலய நிர்வாகம் பொலிஸில் முறையிட்டுள்ளது.

ஆலயத்தின் கூரை வழியாக இறங்கிய திருடர்கள் 6 உண்டியல்களை உடைத்து பணத்தை திருடியுள்ளனர். ஆலயத்துக்குள் நுழைந்த திருடர்கள் சி. சி. ரீ. வி. கமெரா இணைப்பை துண்டித்த பின்னரே திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நீதித்துறை சேவையை சேர்ந்த 20 அதிகாரிகள் பணிநீக்கம்!

கொழும்பு, நவ. 03

மேல் நீதிமன்ற நீதிபதி, மாவட்ட நீதிபதிகள், நீதிவான்கள் என நீதித்துறை சேவை ஆணைய கத்தின் 20 அதிகாரிகள் அவர்களின் பணிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில், ஏழு பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மற்றவர்கள் பணி இடைநீக்கம் அல்லது கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளனர்.

நீதித்துறை சேவையில் உள்ள வர்களுக்கு எதிராக பொதுமக்கள் அளித்த முறைப்பாடுகள்மீதான விசாரணைகளைத் தொடர்ந்தே, இந்த பணி நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்தநிலையில், மேல் நீதிமன்றத்தில் தற்போது 10 வெற்றிடங்கள் உள்ளன, அதே நேரத்தில் மாவட்ட, நீதிவான் நீதிமன்றங்களில் சுமார் 60 வெற்றிடங்கள் உள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## போதைப்பொருள் விற்றவர் கைது

கொழும்பு, நவ. 03

ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 32 வயது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வெல்லவாய நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அப்போது, அவரிடமிருந்து 06 கிராம் 450 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. (ஐ)

## தொழிற்சாலையில் வெடிப்பு இளைஞர் பலி மூவர் காயம்!

கொழும்பு, நவ. 03

இறப்பர் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். 3 தொழிலாளர்கள் காயமடைந்துள்ளனர்.

யட்டியந்தோட்டை -கிரிபோருவ தோட்ட இறப்பர் தொழிற்சாலையில் நேற்று காலை 8 மணியளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரசாயனங்கள் கலக்கப் பயன்படுத்தப்படும் இயந்திரத்திலேயே இந்த பெரும் சத்தத்துடன் வெடித்தது. அந்தச் சமயம் அந்த இயந்திரத்தின் அருகே நின்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

25 வயதுடைய ரஜினிகன் என்பவரே உயிரழந்தார். அத்துடன், 3 தொழிலாளர்கள் படுகாயமடைந்து கரவனெல்லை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## ஆயுள்வேத மருத்துவத்துறையில் 303 பேருக்கு இன்று நியமனங்கள்!

கொழும்பு, நவ. 03

உள்நாட்டு ஆயுள்வேத மருத்துவத்துறையை வலுப்படுத்தும் நோக்கில் சமூக சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட 303 பட்டதாரிகளை ஆயுள்வேத மருத்துவ சேவைக்கு இணைப்பதற்கான புதிய நியமனக் கடிதங்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

சுகாதாரம், வெகுசன ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில், கொழும்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

2018ஆம் ஆண்டுக்குப் பிறகு, உள்நாட்டு ஆயுள்வேத மருத்துவத் துறைக்காக ஒரே நேரத்தில் அதிகளவான வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படும் சந்தர்ப்பம் இதுவாகும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## வாகனங்கள் இறக்குமதிக்கான கடன் கடித தொகை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 03

நாட்டில் வாகன இறக்குமதிக்காக இந்த ஆண்டில் இதுவரை சுமார் 180 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் கடிதங்களை திறக்க அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாக வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர். எம். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சுமார் 180 கோடி டொலர் வரை கடன் கடிதங்களை திறக்க அனுமதி அளித்திருந்தாலும், இது வரை 120 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அரசாங்கம் ஆரம்பத்தில் வாகன இறக்குமதியாளர்களுக்கு 120 கோடி டொலர் வரை கடன் கடிதங்களைத் திறக்கவே அனுமதி அளித்திருந்தது. எனினும், கடன் கடிதங்களின் மொத்த மதிப்பு இந்த எல்லையை அடைந்தபோது, அரசாங்கம் படிப்படியாக இந்த எல்லையை 180 கோடி டொலர் வரை அதிகரித்தது.

தற்போதைய நிலையில், கடன் கடிதங்களும் இந்தத் திருத்தப்பட்ட எல்லையை அடைந்துவிட்டதாகவும் பிரதி அமைச்சர் ஆர். எம். ஜெயவர்த்தன மேலும் தெரிவித்தார். (ஐ)

## வனம், சுற்றுச்சூழல் அழிவு 1995 ஊடாக அறிவியுங்கள்

கொழும்பு, நவ. 03

நாட்டில் வன அமைப்பு, சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதங்கள் குறித்து, தகவல்களை வழங்குவதற்காக இன்று முதல் புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

இதன்படி, 1995 என்ற புதிய தொலைபேசி இலக்கத்தின் மூலம் தகவல்களை வழங்க முடியும் என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

வன, வனவிலங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதையும், வன குற்றங்களைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த இலக்கம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்மைய, வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் பாதுகாப்புப் படையினரும் அதிகாரிகளும் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# எமது ஆட்சிக்கு எதிர்க்கட்சிகள் திரைமறைவில் ஆதரவு வழங்கின

### நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, நவ. 03

நல்லாட்சி காலத்தில் நாம் கூட்டு எதிர்க்கட்சியாக செயல்பட்டபோதிலும் அப்போதைய எதிர்க்கட்சி தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் எம்முடன் இருக்கவில்லை. சிலர் எதிர்க்கட்சிக்கான பொறுப்புகளை நிறைவேற்றியபோதிலும் சிலர் அரசாங்கத்துடன் இருந்தனர். எமது ஆட்சி காலங்களில் எதிர்க்கட்சிகள் திரைமறைவில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கின. இதுவே அரசியல் யதார்த்தம் என்று பாராளுமன்ற உறுப்பினரும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த சோனி அல்பா பண்டிகை - 2025 நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல்பாடுகளுக்கு எதிராகக்குரல் கொடுப்பதற்காக சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து 21ஆம் திகதி நுகேகொடையில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

கட்சி என்ற ரீதியில் அரசியலில் நாம் எம்மை பலப்படுத்திக் கொண்டிருக்கிறோம். நாடளாவிய ரீதியில் மீண்டும் சிறீ லங்கா பொது ஜன பெரமுன பலம்மிக்க அரசியல் சக்தியாக உருவெடுத்து வருகிறது.

இந்த அரசாங்கம் ஆட்சியேற்று ஓராண்டு நிறைவடைந்துள்ளது. தேர்தலுக்கு முன்னர் பெரும் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றினர். வரையறையின் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கினர். பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற ரீதியில் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என நாம் தீர்மானித்தோம்.

அனைத்து எதிர்க்கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஒற்றுமையுடன் பயணிக்க தீர்மானித்தோம். எதிர்க்கட்சிகள் இணைந்து கூட்டங்களை நடத்துவது இது முதலாவது சந்தர்ப்பம் அல்ல.

ஜே.வி.பி. இதற்கு முன்னர் சகல எதிர்க் கட்சிக ளுடனும் அரசாங்கங்களு டனும் இணைந்து செயல்பட்டிருக்கிறது.

தேர்தலில் போட்டியி டுவது என்பது இரண்டாம் பட்சமாகும். அது குறித்து தேர்தல் காலங்களில் தீர்மானித்துக் கொள் ளலாம். சிறீ லங்கா பொது ஜன பெரமுன அனைத்துச் சந்தர்ப்பங்க ளிலும் மக்களுக்காக நின்ற கட்சியா கும். நாட்டின் ஒற்றுமைக்காக முன்னின்ற சக்தி என்ற ரீதியில், அதற்கான தலைமைத்துவத்தை எப்போதும் வழங்குவோம் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org